சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **114 / 2013**

பெயர்: முத்துசாமி பி.வா.சா.1 தேதி **16.02.2026**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எனது தகப்பனாருக்கு சொந்த ஊர் பிச்சம்பட்டி. மேற்படி பிச்சம்பட்டியில் உள்ள சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை எனது தகப்பனாரின் இரண்டாவது மனைவியின் குழந்தைகளோடு சேர்ந்து பிரித்துக்கொண்டோமா என்றால் பிச்சம்பட்டியில் உள்ள வீட்டை இரண்டாக பிரித்துக்கொண்டோம். நிலத்தை நான்காக பிரித்துக்கொண்டோம். எங்களது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எனது தகப்பனார் இறந்து சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலகட்டத்திலேயே சொத்துக்களை நாங்கள் பிரித்துக்கொண்டதற்காக கூறிய சங்கதிக்கு ஆதரவாக வருவாய் துறை ஆவணங்களை எதனையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து எனது பெயருக்கு ஆவணம் எதுவும் ஏற்படுத்தியுள்ளாரா என்றால் இல்லை.எனது தம்பி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பியுள்ளார். அதற்கு பதில் அறிவிப்பு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த ஊர் தபால் நிலையத்தில் முத்தம்மாள் பெயரில் எவ்வளவு தொகை இருந்தது என்றால் கட்டளை என்கின்ற ஊரில் உள்ள தபால் நிலையத்தில் ரூ.1,00,000/-த்திற்குள்ளாக இருந்தது. அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி முத்தம்மாள் பெயரில் உள்ள பணம் முழுவதையும் வாரிசுகள் அனைவரும் தான் கையொப்பம் செய்து பெறவேண்டும் என்றாலும், நான் எனது தம்பி இறந்துவிட்டதால் எனது தம்பி பெற்றுக்கொண்டார் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

2. எனது தாயாருக்கு முதல் வாதி உணவு அளித்ததால் அவர் வைத்திருந்த 10 பவுன் நகையை வாதிக்கு கொடுத்தாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. எனது தம்பி சொத்திற்கு தனியாள் என கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. எனது தம்பி உயிருடன் உள்ள வரை மேற்படி சொத்தை அனுபவம் செய்துவந்ததார் என்றாலும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரின் வாரிசுகள் சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருவதாக கூறுவதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் முத்தம்மாள் உயிருடன் இருந்த காலகட்டத்தில் அவருக்கு சொந்தமாக சொத்தை எவருக்கும் பதிவு

செய்யப்பட்டோ, பதிவு செய்யப்படாத ஆவணங்களின் மூலமாக உரிமை மாற்றம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி என்னிடம் வழக்கு சொத்தை பிரித்துக்கொடுக்க கேட்டார் என்றாலும், நான் வீண்வம்பு செய்து பிரித்து கொடுக்க முன்வராததால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ஊர்காரர்கள் முன்னிலையில் எனது தாயார் மறுபயனுக்காக எனக்கு சொத்தை எழுதிக்கொடுத்தாக கூறியது உண்மையாக இருக்கும்பட்சத்தில் ஊர்காரர்களின் பெயரை வழக்கில் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் அனைத்தும் எனது தாயார் முத்தம்மாள் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 3 முதல் 8 பிரதிவாதிகளுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது தம்பி இறந்துபோய்விட்டதார் அவரின் வாரிசுகளுக்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.16 17:04:46 +0530

சார்பு நீதிபதி
குளித்தலை.